கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (Proportional representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 29-7-1980 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் சட்ட மன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 30–7–1980 புதன்கிழமை மாலை 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1–8–1980 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 2–8–1980 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(இ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகப் பேரவை தேர்தல்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகப் பேரவைக்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் கோரியுள்ளது.

எனவே வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 29–7–1980 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 30–7–1980 புதன் கிழமை மாலை 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1–8–1980 வெள்ளிக் கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது ஒரு இடத்திற்கு மேற்படுமாயின் 2–8–1980 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்புநடைபெறும்.